அனுப்புநர்
திருமதி.க.உமாராணி.,பி.இ.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்,
எண் 132/ஏ3 பெரியார் தெரு.
துறைமங்கலம்.
பெரம்பலூர்.

பெறுநர்
ஆணையாளர்,
பெரம்பலூர் நகராட்சி,
பெரம்பலூர்.
பெரம்பலூர் மாவட்டம்.

ந.க.எண் 62/2021 பெமா நாள்: 06.07.2021

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்--பெரம்பலூர் மாவட்டம்- பெரம்பலூர் வட்டம்/ நகராட்சி- பெரம்பலூர் வடக்கு கிராமம் - சர்வே எண்கள் 151/2, 151/1A2, 151/1Bpt, மற்றும் பெரம்பலூர் தெற்கு கிராமம்- சர்வே எண்கள; 2/1-ல் 3.78 ஏக்கர் (1.52.57 ஹெக்டேர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அளித்தல்- தொடர்பாக.

அனுப்பப்பட்டது
இணைப்புடன்
நாள் :.....
.....
.....பார்வை....

பார்வை:-1.மனுதாரர்.திரு.செ.மாணிக்கம், சேலம் மாவட்டம் அவர்கள் விண்ணப்பம் நாள்: 08.02.2021 மற்றும் 01.07.2021.

2.online விண்ணப்பம் எண். 202101201010866- நாள்: 07.02.2021.

3.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5226/2021/TCP-2 நாள்: 21.04.2021.
(சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது)

4.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 5226/2021/TCP-2 நாள் 29.4.2021.

5 .நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19799/2020/போ. நாள்: 24.12.2020.

6. அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (யு.டி.4.(2) நாள்: 04.06.2004.

7. .அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017.

8. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 (ம) அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020.

9. அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, (யு.டி.4.(3) நாள்: 23.09.2020.

10. அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை (யு.டி.4.(1) நாள்: 09.12.2020.

11. அரசுக்கடிதம் எண். 19113/நவ 4(3)/2017 -1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 30.08.2017.

12. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல்1. நாள்: 08.09.2017.
13. இணை இயக்குநர், வேளாண்மை துறை, பெரம்பலூர் அவர்களின் தடையின்மை சான்று கடித எண்.22/5266/2019. நாள்: 27.08.2019.
14. இவ்வலுவலகக் கடிதம் இதே எண். நாள்: 03.05.2021 (நன்னிலை வரி மற்றும் கொடி நாள் கட்டணங்கள் செலுத்த கோரப்பட்டது)
15. மனுதாரர் கடிதம் (நன்னிலை வரி மற்றும் கொடி நாள் கட்டணங்கள் செலுத்தப்-பட்டது) நாள்: 30.06.2021.
16. மனுதாரர் திரு.செ.மாணிக்கம் அவர்கள் கடிதம் (தானப்பத்திரம் ஆசல்) நாள்: 28.04.2021 (நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டது)

....

உத்தரவு:

பெரம்பலூர் மாவட்டம்- பெரம்பலூர் வட்டம்/ நகராட்சி- பெரம்பலூர் வடக்கு கிராமம் - சர்வே எண்கள் 151/2, 151/1A2, 151/1Bpt, மற்றும் பெரம்பலூர் தெற்கு கிராமம்- சர்வே எண்கள; 2/1-ல் 3.78 ஏக்கர் (1.52.57 ஹெக்டேர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை 1-ல் காணும் கடிதத்துடன் இணைத்து பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பார்வை 4-ல் காண் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவில் ம.வ/ந.ஊ.இ. 101/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் மேற்கண்ட உத்தரவினை பெறுவதற்கு ஆணையாளர், பெரம்பலூர் நகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8/7/2021

உதவி இயக்குநர்,
பெரம்பலூர் மாவட்டம்.

நகல்:

1. திரு.செ.மாணிக்கம்,
9/384- வடக்கு காட்டுக்கொட்டை,
பள்ளக்காடு கிராமம்,
நடுவலூர் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்- 62 6 105.

} பத்தி ஒன்று மட்டும்.

8/7/21

08/07/21

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை, சென்னை

கோப்பு எண்.5226 / 2021 / TCP-2 நாள் :29.04.2021

பெறுநர்,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்.

மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.101/2021

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே. TNCDBR-2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் வினிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

..2..

8. மனுதாரர் மனைப்பிரிவுத் தொடர்புடைய ஆணையாளர், பெரம்பலூர் நகராட்சி அவர்களின் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் இசைவு Concurrence மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமைத் தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப் பிரிவிற்கு Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

..3..

அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விவரம்		பரப்பளவு விழுக்காடு
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	3.78 ஏக்கர் அல்லது 15297.12 ச.மீ.
ஒதுக்கிய மனைகள்	-	74 (E.W.S மனைகள் உட்பட)
பொது ஒதுக்கீடு **மனுதாரர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது.**		
பூங்கா	-	1106.21 ச.மீ.
2. **உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள்**	-	5035.75 ச.மீ.
3. **பேரூராட்சிக்கான ஒதுக்கீடு**	-	68.53 ச.மீ. 0.67%
4. **தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது**	-	55.00 ச.மீ. 0.54%
விற்பனைக்குரியவை EWS மனைகளின் பரப்பு மனை எண்கள் 2. கடை-1	- -	1102.39 ச.மீ. 10.74% 45-55 மற்றும் 58-64. 124.79ச.மீ. 1.21%

(ஒம்/-) பா.கணேசன்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

29/4/24

Tp.a

பதிவு அஞ்சல் மூலம்

ந.க.62/2021

நகர் ஊரமைப்புத் துறை

அனுப்புநர்
திரு.பா.கணேசன். இ.ஆ.ப.,
நகர் ஊரமைப்பு இயக்குநர்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
சிஎம்டிஏ வளாகம்,
ஈ & சி மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை - 600 107.

பெறுநர்
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
பெரம்பலூர் மாவட்டம்.

DISTRICT TOWN AND COUNTRY PLANNING OFFICE * PERAMBALUR DISTRICT *
4502
DATE 30/4/2021

ந.க.எண்.5226 / 2021 / TCP- 2, நாள்.29.04.2021

30/4/2021

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை-107 - பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - பெரம்பலூர் மாவட்டம் / வட்டம் / நகராட்சி - பெரம்பலூர் வடக்கு கிராமம், சர்வே எண்கள்.151/2, 151/1A2, 151/1Bpt மற்றும் பெரம்பலூர் தெற்கு கிராமம் - சர்வே எண்.2/1-ல் 3.78 ஏக்கர் (1.52.57 ஹெக்டேர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. மனுதாரர் திரு.செ.மாணிக்கம், சேலம் மாவட்டம் அவர்கள் விண்ணப்பம், நாள்.08.02.2021.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம், ந.க.எண்.62/2021/பெமா, நாள்.27.02.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம், ந.க.எண்.5226/2021/TCP-2, நாள்.21.04.2021. (சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதலளிக்கப்பட்டது).
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
5. மனுதாரர் திரு.S.மாணிக்கம் அவர்கள் கடிதம், நாள்.28.04.2021.
6. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
7. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.05.2017.
8. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
9. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
10. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
11. அரசு கடிதம் எண்.19113/நவ4(3)/2017-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017.

12. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை
ந.க.எண்.13696/2017/LA1, நாள் .08.09.2017.

பார்வை 1 மற்றும் 2-ல் கூட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை 3-ல் கூட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்.21.04.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 5-ல் கூட்டிய கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தாணப்பத்திர எண் .2438/2021 மற்றும் 2439/2020, நாள் .27.04.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2) மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ.எண்.101/2021** என எண்ணிடப்பட்டு 5 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3) மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4) உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5) செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. (a) பார்வை 10-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 8-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.
2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
3. பார்வை 11 மற்றும் 12-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 7-ல் கண்டுள்ள அரசாணையின்படி **திட்டமில்லா பகுதியில்** அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

6. பார்வை 6 மற்றும் 10-ல் காண் அரசாணையின்படி மனைகளுக்கான நன்னிலை வரி மற்றும் இதர கட்டணங்களை, உதவி இயக்குநர், பெரம்பலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களால் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட பின்னரே திட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும். மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலைவரி கட்டணத்தில் 20% தொகையை "Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Payable at Chennai என தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை பெறப்பட்டு இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
(5 தொகுப்பு மற்றும் அசல் தான பத்திரம்)

(ஒப்/-) பா.கணேசன்
நகர் ஊரமைப்பு இயக்குநர்

நகல்:

1. மனுதாரர்
திரு.S.மாணிக்கம்,
9/384, வடக்கு காட்டு கொட்டை,
பள்ளக்காடு கிராமம்,
நடுவலூர் அஞ்சல், (பத்தி ஒன்று மட்டும்)
கெங்கவல்லி வட்டம் சேலம் மாவட்டம்.

2. ஆணையாளர்,
பெரம்பலூர் நகராட்சி, (பத்தி ஒன்று மட்டும்)
பெரம்பலூர்.

3. இருப்பு கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

4. கோப்பு (வரைபடம்-1 (ம) நிபந்தனைகள் படிவம்-1)

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

29/4/21
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்

29/4/21